S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் நவம்பர் 25 * 2025 * மலர் -1 * இதழ்-177* VOL-1 * ISSUE-177 விலை ரூ.3 * பக்கம் -4

## காற்றழுத்தம் புயலாக உருமாறுகிறது:

# தமிழ் நாட்டிற்கு ஆரஞ்சு எச்சரிக்கை!

## ★12 முதல் 20 செ.மீ. வரை கனமழைக்கு வாய்ப்பு!!

சென்னை, நவ.25

வங்கக் கடலில் உருவாகியுள்ளகாற்றழுத்ததாழ்வு நிலை தொடர்ந்து வலுவடைந்து வருகிறது. அது நாளை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைகிறது. அதன்பிறகு, புயலாகவும் உருமாறும். அதே நேரத்தில், இலங்கை அருகே நாளை இன்னொரு புயல் சின்னமும் தோன்றுகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் தொடர்ந்து மழை பெய்யும். இன்று மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. 12 முதல் 20 செ.மீ. வரை கனமழை பெய்யும்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் 16 –ஆம் தேதி தொடங்கியது. அதன்பிறகு, ஒரு மாதத்திற்கும் மேலாகி விட்டது. இந்த காலக்கட்டத்தில் சரிவர மழை பெய்ய வில்லை.


பருவமழை தொடங்கிய சமயத்தில் குறைந்த காற்றழுத்தம் உருவானது. இதன் காரணமாக வட மாவட்டங்களில் மட்டும் மழை பெய்தது. அதன்பிறகு, புயல் உருவானது. அது, ஆந்திராவிற்கு சென்று விட்டது.

புயலுக்குப்பின்அமைதி என்ற சொல்லுக்கு ஏற்ப பருவமழை நீண்ட நாள் விடுப்பு எடுத்துக்கொண்டது. இப்படிபட்ட நிலையில், கடந்த வாரம் முதல் வானிலையில் மாற்றம் ஏற்பட்டது.

வங்கக் கடல் பகுதியில் காற்றின் மேலடுக்கில் சுழற்சி ஏற்பட்டதால், கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய தொடங்கியது. குறிப்பாக, தென் மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது.

அதுவும், நேற்று முன் தினத்திலிருந்து நெல்லை, குமரி, தென்காசி, தூத்துக்குடி, இராமநாதபுரம், மதுரை மற்றும் டெல்டா மாவட்டங்களில் கன மழை பெய்ய தொடங்கியது.

நேற்று பகலிலும், இரவிலும் இடைவிடாமல் அடை மழை போல் பெய்து வருகிறது. இன்று



காலையிலும் இந்த மழை நீடித்தது. இதனால், பல இடங்களில் 20 செ.மீ.க்கும் மேலும் மழை பதிவாகி உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள நாலுமுக்கு என்ற இடத்தில் 26 செ.மீ. மழை பெய்துள்ளது. ஊத்து என்ற இடத்தில் 25 செ.மீ., காக்காச்சி 23 செ.மீ., மாஞ்சோலை 23 செ.மீ., மழை பதிவானது.

தூத்துக்குடி திருச்செந்தூர், குலசேகரன் பட்டினம் ஆகிய ஊர்களில் தலா 13 செ.மீ., மழை பதிவானது. கயத்தாறு –11 செ.மீ., காயல்பட்டினம் 10 செ.மீ., சாத்தான்குளம் 9 செ.மீ., என்ற அளவிலும் மழை பெய்துள்ளது.

இதனால், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. குளங்கள் நிரம்பிவருகின்றன. தாமிரபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில் அடை மழை பெய்து வருகிறது. இதனால், விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பெய்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த பயிர்கள் நாசமடைந்தன.

இப்போது, தாளடி சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போது பெய்து வரும் மழையால் நெல் நடவு செய்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் , வங்க கடலின் தென்கிழக்குப் பகுதியில் தெற்கு அந்தமான் பகுதியை ஒட்டி நேற்று முன் தினம் குறைந்த காற்றழுத்தம் உருவானது. இது மேற்கு – வட மேற்கு திசையில் நகர்ந்து படிபடியாக வலுவடைந்து வருகிறது.

அடுத்த 24 மணிநேரத்திற்குள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும் என்றும், அதற்கு அடுத்த 48 மணி நேரத்தில் புயலாக மாறும் கணிக்கப்பட்டுள்ளது. புயலாக உருவெடுத்தால், அதற்கு சென்யார் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இதுவும் தமிழகத்தை நோக்கியேநகர்ந்துகொண்டிருக்கிறது. இதன்மூலம், வட தமிழ்நாட்டில் இனி வரும் நாட்களில் கனமழையை எதிர்பார்க்கலாம்.

இப்படிபட்ட நிலையில், வங்க கடலில் இலங்கைக்கு அருகே நாளை இன்னொரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாக வாய்ப்புள்ளது என்று அகில இந்திய வானிலை இலாகா தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் கன மழை நீடிக்கும்.

இப்படிபட்ட நிலையில் தமிழ்நாட்டிற்கு இன்று மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதனால், பல இடங்களில் 12 முதல் 20 செ.மீ. வரை மழை பெய்யும் வாய்ப்புள்ளது. இன்று கனமழை காரணமாக 17 மாவட்டங்களில் பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

## வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி:

# இந்திய தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தமிழகம் வருகை!

சென்னை, நவ. 24–

தமிழ்நாட்டில் கடந்த 4ந் தேதி முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) தொடங்கின. இந்தப் பணிகளில் தமிழகம் முழுவதும் 68 ஆயிரத்து 470 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். தேர்தல் முகவர்க ளாக அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 2.38 லட்சம் பேர் களத்தில் உள்ளனர்.




தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் 27ந் தேதி நிலவரப்படி மொத்தம் 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 6 கோடியே 15 லட்சத்து 25 ஆயிரத்து 728 பேருக்கு அதாவது 95.96 சதவீதம் வாக்காளர்களு க்கு படிவங்கள் வழங்கப்பட்டுவிட்டதாக இந்திய தேர்தல் கமிஷன் நேற்று தெரிவித்தது. அவ ற்றில் 2 கோடியே 59 லட்சத்து 786 படிவங்கள் அதாவது 40.40 சதவீதம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இதற்கிடையே தமிழகத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளை மதிப்பாய்வு செய்வதற்காக தமிழகத்திற்கு 3 நாட்கள், இந்திய தேர்தல் கமிஷன் அதிகாரிகள் வருகை தர உள்ளனர். அவர்கள் இன்று முதல் 26ந் தேதி வரை சென்னை, செங்கல்பட்டு, கோவை, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு சென்று அங்கு நடக்கும் பணிகளை ஆய்வு செய்வார்கள். இந்த தகவலை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். அந்த வகையில், தேர்தல் கமிஷனின் ஊடகப் பிரிவு அதிகாரி பவன், தேவன்ஷ் ஆகியோர், எஸ்.ஐ.ஆர். தொடர்பான ஊடக ஒருங்கிணைப்பு மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் பற்றி மதிப்பாய்வு செய்வார்கள். அவர்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று கள ஆய்வையும் மேற்கொள்வார்கள்.

தேர்தல் கமிஷனின் இயக்குனர் கிருஷ்ண குமார் திவாரி, எஸ்.ஐ.ஆரின் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்வார். அவர் கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்குச் சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் கணக்கீட்டு படிவங்கள் வழங்கும் பணி, அவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்யும் பணி ஆகியவற்றை மதிப்பாய்வு செய்வார்.

தேர்தல் கமிஷனின் செயலாளர் மதுசூதன் குப்தா, சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் எஸ்.ஐ.ஆர். பணிகள் பற்றி ஆய்வு மேற்கொள்வார்.



நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சிமலைபகுதியில்தொடர்மழைகாரணமாகதாமிரபரணிஆற்றில்வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.



மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் இரவு விடிய, விடிய கனமழை பெய்தது. இதனால் கம்பம் அருகே உள்ள சுருளி அருவியில் வெ ள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சுற்றுலா பயணிகள் குளிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. அங்குள்ள சிவன் கோவிலுக்குள் தண்ணீர் புகுந்துள்ளதை படத்தில் காணலாம்.

## மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில்

# சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு!

## சுற்றுலா பயணிகள் குளிக்க தடை!!

கம்பம்,நவ.25–




மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் நேற்று இரவு விடிய விடிய கன மழை பெய்து சுருளி அருவி நீர் பிடிப்பு பகுதிகளான அரிசி பாறை, ஈத்தக் காடு , தூவானம் அணை நிரம்பி வனப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது, மேலும் காட்டு நீரோடைகள் சுருளி அருவியில் கலந்து வெள்ளமாக கொட்டுகிறது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியிலான மேகமலை, இரவங்கலார், மகாராஜா மெட்டு வெண்ணியாறு உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்வதால் தொடர்ந்து சுருளி அருவிக்கு நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் சுருளி அருவியில் குளிப்பதற்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். கனமழை பெய்து வருவதால் அருவி பகுதிக்கு பொதுமக்கள் யாரும் வர வேண்டாம் என கம்பம் கிழக்கு வனச்சரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும் தொடர் மழையும் பெய்து வருகிறது. சோழவந்தான் பகுதியில் பெய்து வரும் தொடர்மழை காரணமாகவும், அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும் மேலக்கால் அருகே நிலையூர் கால்வாயில் அதிகளவில் தண்ணீர் செல்கிறது.



சேலத்தில்நேற்றுஅதிகாலைசாரல்மழைபெய்துவருகிறது.பள்ளிமற்றும்வேலைகளுக்கு செல்லும் பொதுமக்கள் குடைபிடித்து செல்வதை படத்தில் காணலாம்.



பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகளை மக்கள் தரும் தகவல்களின் அடிப்படையில் வீட்டு வாசலில் சேகரிக்கும் சேவை நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக, இராயபுரம் மண்டலம், வார்டு58க்குட்பட்ட வெங்கடாசலம் தெருவில் உள்ள ஒரு வீட்டில் இருந்து பழைய சோஃபா உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றப்பட்டன.

### புல்லூர் கனகநாச்சியம்மன் கோவிலில்

# ஆந்திர மாநில முதலமைச்சரின் மனைவி சாமி தரிசனம்!

## பாலாறு தடுப்பணையில் படகு சவாரி செய்தார்!!

வாணியம்பாடி, நவ.25

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த புல்லூர் தடுப்பணை பகுதியில் உள்ள கனகநாச்சியம்மன் கோவிலில் ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் மனைவி புவனேஷ்வரி சாமி தரிசனம் செய்து, பாலாறு தடுப்பணையில் படகு சவாரி செய்தார்.



பின்னர் சாமி தரிசனம் செய்ய வந்த மக்களிடம் தமிழில் பேசிய அவர் கணவர்மார்கள் மனைவிகளை அடிக்கிறீர்களா என கேட்டவுடன் கூட்டத்தில் சிரிப்பலை ஏற்பட்டது.

தொடர்ந்து பேசிய அவர் முதல் அமைச்சர் சொந்த தொகுதிக்ககூட வராத அளவிற்கு மக்கள் நலனிற்காக தொடர்ந்து உழைத்து வருகிறார். தொடர்ந்து மாநிலத்தில் பல்வேறு நிறுவனங்களை அழைத்து வந்து தொழிற்சாலைகளை உற்பத்தி செய்து வருகிறார், அவர் வராததாலேயே நான் வந்து இருக்கின்றேன், மேலும் இந்த கனகநாச்சியம்மன் ஆலயம் 3.5 கோடியில் புணரமைக்கப்பட்டு இந்த கோவில் சுற்றுலா தலமாக மாற்றப்படும், பொது மக்களின் வசதிக்காக பாலாற்றின் குறுக்கே பாலம் அமைக்க ஏற்பாடுகள் செய்ய முதல்வரிடம் தெரிவிப்பதாக கூறினார்.

நிகழ்ச்சியில் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார்

சந்திரபாபு நாயுடு மனைவியை வரவேற்று, கிருஷ்ணா நதி 750 கிலோமீட்டர் தூரம் ஆந்திராவிற்கு அந்திரி நிவாஸ் திட்டத்தின் கீழ் நீர் கொண்டு வந்துள்ள நிலையில், அதனை புல்லூர் வரை கொண்டு வந்து பாலாற்றில் இணைத்து தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் செய்து தர கோரிக்கை வைத்தார், அதற்கு புவனேஸ்வரி பதில் அளித்து கூறியதாவது அந்த திட்டத்திற்கு மின்சாரம் பற்றாக்குறை உள்ளதாகவும், அதற்கு மின்சாரம் வழங்க தமிழக அரசு ஏற்படுத்திக்கொடுத்தால், தமிழக மக்களுக்கும் கிருஷ்ணா நதி நீர் வழங்க நாங்களும் தாயராக உள்ளோம் என தெரிவித்தார்.



திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவமனை கட்டிடத்திற்கு இணைப்பு சாலை அமைப்பதற்கான பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார் மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா,அரசு தலைமை மருத்துவர், துறை சார்ந்த அதிகாரிகள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மூங்கம் பட்டி கிராம மக்கள்

# தார் சாலை அமைக்க வேண்டி மதியழகன் எம்.எல்.ஏ.விடம் கோரிக்கை!



கிருஷ்ணகிரிநவ.25

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளிஅடுத்தபாளேத்தோட்டம்ஊராட்சி மூங்கம்பட்டி, காட்டு மூக்கம்பட்டி, அருந்ததியர் நகர், அம்பேத்கர் நகர், குஞ்சால் கவுண்டர் கொட்டாய் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமத்தில் சுமார் 500 க்கும் மேற்ப்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதி கிராம மக்கள் சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாக மண் சாலையை பயன்படுத்தி வருகின்றனர்.

கிராம மக்களின் முக்கிய பிரதான சாலையான இந்த சாலையை மழை காலங்களில் பயன்படுத்த முடியாத சூழல் உள்ளது. மேலும் மண் சாலை என்பதால் விஷ ஜந்துக்கள் சாலையில் கிடப்பதால் அதனால் மனித உயிருக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுவதாகவும் மேலும் பள்ளி கல்லூரி மாணவர்கள் சிப்காட் கம்பெனிகளுக்கு செல்லும் பணியாளர்கள் வேளைக்கு வெளியூர் செல்லும் கிராம மக்கள் மற்றும் அடிப்படை பணிகளுக்கு செல்ல முடியாத சூழல் ஏற்படுவதாக கிராம மக்கள் வேதனை தெரிவித்தனர். எனவே இந்த மண் சாலையை தார் சாலையாக மாற்றி கிராம மக்கள் பயன்பாடிற்கு கொண்டுவர வேண்டுமென திமுக மாவட்ட கழக செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம் எல்ஏவிடம் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் மன அழுத்தனர் மனுவை விசாரணை மேற்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் விரைந்து சாலை அமைக்க ஏற்பாடு செய்வதாக கிராம மக்களிடம் உறுதியளித்தார் இதில் ஒன்றிய கழகச் செயலாளர் குணாவசந்த அரசுபாலை தோட்டம் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கோபி மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

# மனைவி, குழந்தைகளை கொன்று இளைஞர் தற்கொலை!

ராஞ்சி, நவ.25

ஜார்க்கண்ட் மாநிலம் தும்கா மாவட்டம் பர்டாஹி கிராமத்தை சேர்ந்த இளைஞர் வீரேந்திரா (வயது 30). இவரது மனைவி ஆர்த்தி குமாரி (வயது 26). இந்த தம்பதிக்கு ராஹி (வயது 4) என்ற மகளும், வீரஜ் குமார் (வயது 2) என்ற மகனும் இருந்தனர்.

இந்நிலையில், இன்று காலை வெகுநேரமாகியும் வீரேந்திராவின் வீடு பூட்டியே இருந்தது. குடும்பத்தினர் யாரும் வீட்டில் இருந்து வெளியே வரவில்லை. இதனால் சந்தேகமடைந்த கிராமத்தினர் இதுகுறித்து போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அங்கு குடும்பத்தினர் 4 பேரும் சடலமாக கிடந்துள்ளனர். விசாரணையில் மனைவி, 2 குழந்தைகளை கழுத்தை நெரித்து கொன்ற வீரேந்திரா பின்னர் வீட்டில் உள்ள அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். 4 பேரின் உடல்களையும் மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மனைவி, குழந்தைகளை கொன்று வீரேந்திரா தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### பள்ளி அருகே

# பதுக்கி வைத்திருந்த வெடிபொருட்கள் மீட்பு!

டேராடூன்நவ.25

உத்தராகண்ட் மாநிலம், அல்மோரா மாவட்டத்தில், சால்ட் என்ற பகுதியில் 2 பள்ளிகள் இருக்கும் இடத்திற்கு அருகே புதரில் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. கிரிக்கெட் பந்தை எடுக்க சென்ற மாணவர்கள் வெடிபொருட்கள் இருப்பதை முதலில் பார்த்தனர். இது குறித்து போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். பின்னர் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், உடனடியாக அந்த பகுதியை சுற்றி வளைத்தனர். வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் மோப்ப நாய் உதவியுடன் சோதனை நடத்தினர். மர்மநபர்கள் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். பள்ளி அருகே வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து எப் ஐஆர் பதிவு செய்து விசாரணை நடந்து வருகிறது. வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம் என அல்மோரா மாவட்ட எஸ்எஸ்பி தேவேந்திர பிஞ்சா தெரிவித்தார். ஜெலட்டின் குச்சிகள் என்பவை வெடிபொருட்களாகும். அவை சுரங்கம், கட்டுமானம் மற்றும் பாறைகளை உடைக்கும் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. டில்லி குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து நாடு முழுவதும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில், பள்ளி அருகே வெடிபொருட்கள் பிடிபட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### வாக்கு திருட்டைக் கண்டித்து

# டெல்லியில் டிச.14ந் தேதி காங்கிரஸ் பேரணி!

சென்னை, நவ.25

வாக்கு மோசடிக்கு எதி ராகடிசம்பர்14ஆம் தேதி டெல்லியின் ராம்லீலா மைதானத்தில் பேரணி நடத்தப்போவதாக காங் கிரஸ் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்வதாகவும், நமது அரசியலமைப்பை அழிக் கும் இந்த முயற்சிகளுக்கு எதிராக நாடு முழுவதும் ர் ஒரு செய்தியை அனுப்ப டிசம்பர் 14 அன்று டெல்லி யின் ராம்லீலா மைதானத் தில் 'வோட் சோர் காடி சோட்' என்ற பிரமாண்ட பேரணியை காங்கிரஸ் நடத்தும் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் எக்ஸ்சில் பதிவிட்டுள்ளார். மேலும், போலி வாக்காளர்களைச் சேர்ப்பது, எதிர்க்கட்சிகளுக்குச் சார் பெயர்களை நீக்குவது மற் பான வாக்காளர்களின் றும் வாக்காளர் பட்டியலில் பெருமளவில் மாற்றங்களைச் செய்வது போன்ற பா.ஜ.க. தேர்தல் ஆணையத்தின் தீய தந்தி ரங்களை நிராகரித்து, இந் தியாவின்' ஒவ்வொரு மூலையிலிருந்தும் கோடிக் கணக்கானகையெ ழுத்துகளைப் பெற்றுள் ளோம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பேரணி நடத்துவது என்று முன்னதாக நடந்த காங்கி ரஸ் கூட்டத்தில் முடிவெ டுக்கப்பட்டது. இந்த பேர ணியில் காங்கிரஸ் தலை வர்கள் ராகுல், கார்கே, பிரியங்கா உள்ளிட்ட பலர் கலந்துகொ ள்கிறார்கள்.

### கோபியில்

# தொழிலாளி மீது தாக்குதல்; 3 பேர் மீது வழக்கு!

கோபி, நவ, 25

கோபி,ல.கள்ளிப்பட்டி யைச் சேர்ந்தவர் தன ராஜ்(49). கூலி தொழி லாளி. இவர் சம்பவத் தன்று ரோட்டோரம் சிறு நீர்கழிக்க சென்றார்.

அப்போது அங்கிருந்த சிலர் இங்கு ஏன் சிறுநீர் கழிக்கிறீர்கள்? என்று கேட்டார். ஆத் திரம டைந்த கும்பல், தாங்கள் மறைத்து வைத் திருந்த கம்பி மற்றும் கல்லால்தன ராஜை தாக்கினார்கள். இதை கவனித்த அருகில் இருந்தவர்கள் காப்பாற்ற சத்தம் போட் டுக் கொண்டு ஓடி வந்தார். உடனே அங்கிருந்த பேரும் தப்பியோடி விட் டனர்.

பின்னர், அக்கம், பக்கத் தில் இருந்தவர்களின் உதவியுடன் தனராஜ் கோபி அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இச்சம் பவம் குறித்து கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பியோடிய 3 பேரை தேடி வருகிறார்கள்.

### பாகிஸ்தானில்

# 17 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை!

பெஷாவர், நவ. 25

பாகிஸ்தானில் பாது காப்புப் படையினர் மேற் கொண்ட நடவடிக் கையில் 17 பயங்கரவாதி கள் கொல்லப்பட்டனர். இது குறித்து ராணுவம் வெளியிட்ட அறிக்கை யில், ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய கைபர் பக்துன்கவா மாகா ணத்தின் குர்ரம் மாவட் டத்தில் பயங்கரவாதிகள் பதுங் கியிருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் தேடுதல் நடவடிக்கை மேற் கொள் ளப்பட்டது. இதில் தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்இ தலிபான்பாகிஸ் தான் (டிடிபி) அமைப்பைச் சேர்ந்த 17 பயங்கரவாதி கள் சுட்டுக் கொல்லப்பட் டனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ் குமார் , சென்னை நுங்கம்பாக்கம், எம்.ஓ.பி வைஷ்ணவா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற "நம்ம லிட்டில் ஹீரோஸ் 2025" என்ற நிகழ்ச்சியில் உர்பேசர் சுமித் நிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தில் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கையடக்க கணினிகளை (Tab) வழங்கினார்.

### புதூர் நாடு பகுதியில்

# மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 25 நபர்களுக்கு பணி நியமனம்!

## கலெக்டர், எம்.எல்.ஏ. வழங்கினர்!!



திருப்பத்தூர் நவ.25

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த புதூர் நாடு பகுதியில் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொழில் பயிற்சி கூட்டம் நடத்தப்பட்டது இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர் பின்பு இதில் பயன்பெற்ற 25 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது இந்த பணி நியமனமானது திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி. திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளாதேவி. திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் விஜயா அருணாச்சலம் உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் பணி நியமனம் பெற்ற அனைவரும் தமிழக முதல்வருக்கும் சட்டமன்ற உறுப்பினருக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் நன்றி தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

# முரசொலி மாறனின் 22ஆம் ஆண்டு நினைவுநாள்!



தாராபுரம் நவ.25

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 22ஆம் ஆண்டு நினைவு திருப்பூர் கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்களுடன் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இளஞ்சூரியன் இல பத்மநாபன் அவர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திய போது. உடன் நகர செயலாளர் முருகானந்தம் வழக்கறிஞர் மாவட்ட கழக அமைப்பாளர் செல்வராஜ் மாவட்ட துணைச் செயலாளர் பிரபாவதி பெரியசாமி ஜீவா பெரியசாமி ஜீவா ஜெயக்குமார் கவுன்சிலர் முபாரக் புனிதா சக்திவேல் முத்துலட்சுமி மற்றும் நகர திமுக ஆதிதிராவிடர் அமைப்பாளர் சிவசங்கர் தொண்டரணி சண்முகம் மீனவ சங்கத் தலைவர் தில்லை முத்து நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### வாகரையில்

# மக்காச்சோளம் சாகுபடி விவசாயக் கருத்தரங்கம்!

ஒட்டன்சத்திரம் நவ.25

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியம், வாகரையில் இந்தியன் பொட்டாஸ் நிறுவனம் (ஐபிஎல்;), வாகரை மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையம் ( தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இணைந்து மக்காச்சோளம் சாகுபடி விவசாயக் கருத்தரங்கம் நடைபெற்றது.



இக்கருத்தரங்கிற்கு வருகை தந்த அனைவரையும் வாகரை மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையத்தின் இணை பேராசிரியர் சத்தியசீலா வரவேற்று பேசினார். இதில் இந்தியன் பொட்டாஸ் நிறுவனத்தின் (ஐபிஎல்) மாநில மேலாளர் கே.பி.பார்வதி ராஜா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். துணை மேலாளர் கே.ஹரிபாபு கலந்துகொண்டு நிறுவனத்தின் செயல்பாடு பற்றி எடுத்துரைத்தார். வாகரை மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர். செல்வகுமார்; கலந்துகொண்டு களை மேலாண்மை மற்றும் விதை உற்பத்திபற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

இதில் இணைப் பேராசிரியர் டாக்டர். ரமேஷ் கலந்துகொண்டு மக்காச்சோளம் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயல்பாடு பற்றி எடுத்துரைத்தார். டாக்டர். சதீஸ்குமார் கலந்துகொண்டு மண்வளம் மற்றும் நுண்ணூட்ட சத்தின் பயன்பாடு பற்றி எடுத்துரைத்தார். ஐபிஎல் நிறுவனத்தின் பொட்டாஸ், டி.எ.பி, யூரியா, 161616 ஐபிஎல் வேப்பம்புண்ணாக்கு மற்றும் பாலிகலைட் பற்றி விற்பனை அதிகாரி ஜெகதீஸ்பாபு தொழில்நுட்ப உரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் முதன்மை விற்பனை அதிகாரி பி.மாரியப்பன் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக தொகுத்து வழங்கினார். முடிவில் திண்டுக்கல் மாவட்ட விற்பனை அதிகாரி சரவணபிரகாஸ் நன்றி கூறினார்.

இக்கருத்தரங்கில் 250க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில், 14 வது ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி போட்டிக்கான கோப்பையினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் கலந்து கொண்டு இணைந்து அறிமுகம் செய்து வைத்தனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 05 புதிய BSVI நகரப்பேருந்துகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர்பொ.இரத்தினசாமி, மற்றும் பலர் உள்ளனர்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பாக நடைபெற்ற 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவில் மாவட்டத்திலேயே சிறந்த கூட்டுறவு கடன் சங்கத்திற்கான விருது கி425 காமயகவுண்டன்பட்டி தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்சித் சிங் ,தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் சங்கத்தின் செயலாட்சியர் .க.சதீஸ்,சங்க செயலாளர் மதி ரா.பதிபூரணம் ஆகியோர்களிடம் வழங்கினார்கள் உடன் தேனி மண்டல இணைப்பதிவாளர் மதி நர்மதா மற்றும் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குனர் வாஞ்சிநாதன் ஆகியோர் இருந்தனர்.



தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, , திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், ஆகியோர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 2025 &ம் ஆண்டிற்கான 21 வயதிற்குட்பட்ட ஆண்கள் கலந்து கொள்ளும் 14வது உலக கோப்பை ஜீனியர் ஹாக்கி போட்டி நடைபெறுவதை முன்னிட்டு கோப்பை அறிமுக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கோப்பை மற்றும் இலட்சனையை அறிமுகப்படுத்தினார்கள்.



ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அடுத்த தக்கோலம் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் நேற்று நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் காந்தி பார்வையிட்டு பொதுமக்களுக்கு அளித்திட்ட சிகிச்சைகளைகேட்டறிந்தார். உடன்கலெக்டர்சந்திரகலா, பொது சுகாதாரம் துணை இயக்குநர் செந்தில்குமார். பேரூராட்சிதலைவர் நாகராஜ் உட்பட பலர் இருந்தனர்.

# பசுவின் மீது ஆசிட் ஊற்றிய கொடூரம்!

## தம்பதி மீது வழக்கு!!

பாலக்கோடு, நவ. 25

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அடுத்த மாரண்ட அள்ளியைச் சேர்ந் தவர் உஷா. இவருக்கும், அதே பகுதியை சேர்ந்த காளியப்பன் மஞ்சுளா தம் பதிக்கு இடையே, பொது கிணற்றை பயன்படுத்து வது தொடர்பாக முன்வி ரோதம் உள்ளது. இதுதொ டர்பாக கடந்த சில நாட்களுக்கு முன், இருதரப் பினருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டது.

இந்த நிலையில் காளியப் பன், மஞ்சுளா ஆகியோர், உஷா வளர்த்து வரும் பசு மாட்டின் மீது ஒரு திர வத்தை ஊற்றி விட்டு அங்கி ருந்து தப்பிச் சென்ற தாக கூறப்படுகிறது. இதில் மாட் டின் கண் மற்றும் உடல் வெந்து போனது.

அ இதனை பார்த்து அதிர்ச்சி யடைந்த உஷா, மாட்டை சிகிச்சைக்காக கால் நடை மருத்துவமனைக்கு ழைத்து சென்றார். மாட்டை பரிசோதித்து பார்த்த மருத்துவர்கள், மாட்டின் மீது ஆசிட்டை வீசியிருக்கலாம் என தெரிவித்தனர். தொடர்ந்து மாட்டுக்கு சிகிச்சை அளிக் கப்பட்டது.

இது பற்றி உஷா அளித்த புகாரின் பேரில், மாரண்ட அள்ளி போலீசார் காளியப் பன், மஞ்சுளா ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின் றனர்.

### பாலக்கோடு உழவர்சந்தையில்

# தக்காளி விலை கிலோ ரூ.50க்கு விற்பனை!

பாலக்கோடு, நவ.25

பாலக்கோடு, மாரண்டஅள்ளி, பஞ்சப்பள்ளி, பென்னா கரம், இண்டூர், பாப்பாரப்பட்டி, தர்மபுரி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் அதிகளவில் தக்காளி சாகுபடி செய் யப்படுகிறது. பாலக்கோட்டில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு தக்காளி கொண்டு வரப்பட்டு ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சேலம், ஈரோடு, கோவை, ஈரோடு, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக் கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் நாள் ஒன்றுக்கு சுமார் 70 டன் வரை தக்காளி சராச ரியாக அறுவடை செய்யப்படுகிறது. கடந்த வாரம் ஒருகிலோதக்காளி ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனையான து. தர்மபுரி மாவட்டத்தில், தொடர் மழையால் பாலக் கோடு, அரூர் பகுதிகளி தக்காளி செடிகள் நோய் பாதிப்பு ஏற்பட்டு அழுகியது. இதனால் விளைச் சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. வழக்கமாக பாலக்கோடு உழவர் சந்தை யில் தினமும் 7டன் வரை தக்காளி உழவர் சந்தைக்கு காளி களை விவசாயிகள் விற்பனைக்குகொண்டுவருகின்றனர். இதன்காரணமாக நேற்றும்தக்காளிஒருகிலோரூ.50க்குவிற்பனையானது.

# சிறுமியை பலாத்காரம் செய்த தந்தைக்கு ஆயுள்!

கோவை, நவ.25

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பகு தியை சேர்ந்தவர்15வயதுசிறுமி. இவரைகூலிதொழிலா ளியானதனதுதந்தைமதுபோதையில்பாலியல்பலாத்கா ரம் செய்ததாக கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் சிறுமியின் தந்தை மீது போக்சோ பிரிவில் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணையானது கோவை போக்சோ சிறப்பு கோர்ட்டில் நடந்து வந்தது. நேற்றுஇந்தவழக்கில்தீர்ப்புஅளிக்கப்பட்டது.வழக்கை விசாரித்தநீதிபதிபகவதியம்மாள்சிறுமியைபலாத்காரம் செய்த தந் தைக்கு ஆயுள் தண்டனையும், ரூ.15 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு5லட்சம்இழப்பீடுவழங்கவும்உத்தரவிட்டார்.

# மரத்தில் கார் மோதி பெண் சாவு!

## மேலும் ஒருவர் படுகாயம்!!

கோவில்பட்டி, நவ.25

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் சத்திரப் பட்டி பகுதியை சேர்ந்தவர் ஆபிரகாம் ஞானதுரை. இவர் அங் குள்ள சர்ச் ஒன் றில் பாதிரியாராக பணி யாற்றி வருகிறார்.

இவர் மதுரையில் நடை பெற்ற உறவினர் வீட்டு நிகழ்ச் சியில் தனது மனைவி குணச்செ ல்வியுடன் பங் கேற்று விட்டு காரி ல்ஊருக்கு திரும்பியுள்ளார். காரை ஆபிர காம் ஓட்டி வந் துள்ளார். கார் கோவில் பட்டி அருகே இளையரச னேந்தல் பகுதியில் சென்ற போது கட்டுப் பாட்டினை இழந்து அங்கிருந்த மரத் தின் மீது மோதி விபத்துக்கு ள்ளானது. இதில் சம்பவ இடத்திலேயே குணச் செல்வி (63), பரிதாபமாக உயிரிழந்தார். ஆபிர காம் ஞானதுரை படுகாயமடைந் தார். இது குறித்து தக வல் கிடைத்ததும் கோவில் பட்டி மேற்கு காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உயிரி ழந்த குணச் செல்வி உட லை மீட்டு உடற்கூறு ஆய் விற்காக கோவில் பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் காயம் அடைந்த ஆபிரகாம் ஞானதுரையை மீட்டு அரசு மருத்துவமனை யில் சிகிச்சைக்கு அனுமதித் தனர். விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### தென்னிந்தியாவின் சிரபுஞ்சி

# நாலுமுக்கு, ஊத்து எஸ்டேட் பகுதிகளில் 25 செ.மீ. மழை!

நெல்லை, நவ.25

நெல்லை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலை யில் உள்ள மாஞ்சோலை தேயிலை தோட்டப்ப குதி தற்போது இந்தியா விலேயே அதிக மழை பெறும் இடமாக உள் ளது. இதனால் தற்போது தென்னிந்தியாவின் சிர புஞ்சி என்று அழைக்கப் படுகிறது. இங்கு தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் எப்போதும் வரலாறு காணாத அள வில் மழை பதிவாகும். இதைத்தொடர்ந்து கடந்த 1 வாரத்திற்கு மேலாகவே சோலை மாஞ் தேயிலை தோட்ட பகுதியில் கன மழை கொட்டித்தீர்த்து வருகிறது.

நாலுமுக்கு மற்றும் ஊத்து எஸ்டேட் பகுதிக ளில் கடந்த 24 மணி நேரத்தில் 25 சென்டிமீட் டர் மழை பதிவாகியது. காக்காச்சி எஸ்டேட் பகு தியில் 22 சென்டிமீட்ட ரும், மாஞ்சோலையில் 21 சென்டிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது.



### பாலமேடு பேரூராட்சியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்!

## வெங்கடேசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

அலங்காநல்லூர், நவ.25

மதுரை மாவட்டம் பாலமேடு பேரூராட்சி யில் அரசு மேல்நிலைப்பள்ளியின் வளாகத் தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடந் தது. சோழவந்தான் தொகுதி வெங்கடேசன் எம்எல்ஏ தலைமை தாங்கிகுத்து விளக் கேற்றி தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் பொற்செல் வன், வட்டா மருத்துவர் வளர்மதி. மாவட்ட அவைத்தலைவர் பாலமேடு பாலசுப்பிரம ணியன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ்பரந் தாமன், முத்தையன், அருண்விஜயன், நகர செயலாளர்கள் மனோகரவேல் பாண்டியன், ரகுபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேரூராட்சிதலைர் சுமதி பாண்டியராஜன், செயல் அலுவலர் சசிகலா இடையபட்டி நட ராசன்.இளைஞர் அணி பிரதாப், அவை தலைவர். தங்கம். பழனி. உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. இதில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துபெட் டகம், காசநோயாளிகளுக்கு மருத்துவ உபக ரணங்கள் மற்றும் தூய்மை பணியாளர்க ளுக்குநலத்திட்டஉதவிகள்வழங்கப்பட்டது. வட்டார மருத்துவ அலுவலர் வளர்மதி உள் ளிட்ட 700 க்கும் மேற்பட்ட மருத்துவ குழு வினர்கள் சிகிச்சை யளித்தனர்.

உயர்ரத்த அழுத்தம்,சர்க்கரை நோய், மக ளிர் குழந்தைகளுக்கான நோய் கண்டறிதல், எலும்பு, நரம்பியல், காது, மூக்கு, கண், தொண்டை போன்ற 17 வகை துறைகளை சார்ந்த மருத்துவர்கள் கலந்து கொண்டனர். பொதுமக்களுக்கு சிகி ச்சையளித்து மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து; 5 பேர் படுகாயம்!



தஞ்சாவூர்,நவ.25

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே நெடார் என்ற பகுதியில் இன்று மாலை தனியார் பஸ் சென்றுகொண்டி ருந்தன. அந்த பஸ்சில் 20க்கும் மேற்பட் டோர் பயணித்தனர்.

இந்நிலையில், நெடார் மெயின் ரோட் டில் வளைவில் திரும்பியபோது டிரைவ ரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலை யில் எதிரே வந்த மற்றொரு தனியார் பஸ் மீது மோதியது. இந்த கோர விபத்தில் இரு பஸ்களும் சாலையோர பள்ளத்தில் சரிந்தன.

இந்த விபத்தில் இரு பஸ்களிலும் பய ணித்த 5 பேர் படுகாயமடைந்தனர். விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், விரைந்து சென்று படுகாயமடைந்தவர் களை மீட்டு அருகில் உள்ள மருத்துவம னையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின் றனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்திலிருந்து புதிய 4வழித்தடத்திற்கான நகர் மற்றும் புறநகர் பேருந்துகளைபொதுமக்களின்பயன்பாட்டிற்குகொடியசைத்துதுவக்கிவைத்தார்.உடன்திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் கோகிலாராணி, துணை தலைவர் கான்முகமது, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக துணை மேலளார்கள் நாகராஜன் (தொழில்நுட்பம்) மற்றும் போக்குவரத்துத்துறையை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# ஓசூர் மகா ராஜகணபதி கோவில் கும்பாபிஷேக விழா!



கிருஷ்ணகிரிநவ.25

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அம்மன் நகரில் புதிதாக ஸ்ரீ மகா ராஜகணபதி கோவில் கட்டப்பட்டுள்ளது. கட்டுமான பணிகள் நிறைவடைந்த நிலையில், கும் பாபிஷேக விழா நடைபெற்றது.

விழாவை முன்னிட்டு தீர்த்தகுடம், முளைப்பாரி, பம்பை வாத்தியங்கள் ஊர் வலம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கங்கா பூஜை, கணபதி பூஜை, நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம் மற்றும் யாகசாலை பூஜைகள் நடந்தன. பின்னர் யாகசாலையில் இருந்து புனித கலசங்களில் தீர்த்தங்கள் மங்கள வாத்தி யங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோபுர கலசத்தின் மீது புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது. பின்னர் விநாயகர், முருகன், அம்மன் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு புனித நீர் மூலம் மகா அபிஷேகம் செய் யப்பட்டது.

அதனை தொடர்ந்து ஸ்ரீ மகா ராஜகணப திக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாரா தனை நடந்தது. விழாவில் திரளான பக் தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

விழாவையொட்டி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.





பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.




சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலம், வார்டு110, நுங்கம்பாக்கம் உள்ள செல்லப் பிராணிகள் சிகிச்சை மையத்தில், வளர்ப்பு நாய்களுக்கு கால்நடை மருத்துவர்களால் வெறி நாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்துதல், மைக்ரோ சிப்பிங் பொருத்துதல் மற்றும் உரிமம் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

## சபரிமலையில் குழந்தைகளின் பாதுகாப்புக்கு போலீசாரின் கைப்பட்டை!

கூடலூர். நவ. 24

சபரிமலைக்கு வரும் சிறுவர்களை கண்காணிக்கவும், பாதுகாப்பை கருத்தில் கொண்டும், பத்து வயதுக்குக் குறைவான அனைத்து குழந்தை களுக்கும் காவல் துறை சிறப்பு அடையாள கை பட்டை (ஆம்பாண்ட்) வழங்க தொடங்கியுள்ளது.



பம்பையில் இருந்து மலை ஏறத் தொடங்கும் முன், அனைத்துக் குழந்தைகளின் கைகளிலும், குழந்தையின் பெயர் மற்றும் உடன் வரும் பெரியவரின் பெயர், மொபைல் எண் ஆகியவை பதிவுசெய்யப்பட்ட கை பட்டை (ஆம்பாண்ட் ) அணிவிக்கப்படுகிறது. இதில் குழந்தையின் தகவல்கள் உள்ள QR கோடும் சேர்க்கப்பட்டுள்ளது.

திரளான பக்தர் கூட்டத்தில் குழந்தை கூட்டம் தவறி உறவினர்களை விட்டு பிரிந்து விட்டால், இந்த ஆம் பாண்ட் போலீசாருக்கு குழந்தைகளின் பாதுகாவலர்களை விரைவில் கண்டுபிடிக்க உதவும்.

அதேபோல், மற்ற ஐயப்ப பக்தர்களும் இதைப் பார்த்து குழந்தைக்கு உதவ முடியும். மலை ஏறும் தருணத்திலிருந்து அவர்கள் திரும்ப மீண்டும் வாகனத்தில் ஏறும் வரை, குழந்தை களின் கையில் உள்ள இந்த அடையாள கை பட்டையை அகற்றாமல் இருக்க வேண்டும் என போலீஸ் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



திருச்செங்கோடு96சட்டமன்றதொகுதி மற்றும்திருச்செங்கோடுநகராட்சியில்வருவாய் கோட்டாட்சியர் பி.எஸ்.லெனின் திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் எஸ்ஐஆர் பணி நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

## தூத்துக்குடியில் மழை நீரில் பாய்ந்த மின்சாரம் தாக்கி காவலாளி பலி!

தூத்துக்குடி, நவ.25–

தூத்துக்குடியில் மழை நீரில் பாய்ந்த மின்சாரம் தாக்கி காவலாளி பலியனார்.

தூத்துக்குடி கணேஷ்நகரைச் சேர்ந்தவர் பழனியாண்டி (75). வாட்ச்மேனாக வேலை பார்த்துவந்த இவர் இன்று அதிகாலை நால்வர்நகர் பகுதியில் வாக்கிங் சென்றுள்ளார்.

அப்போது அப்பகுதியில் மின்கம்பி அறுந்துகிடந்ததாக கூறப்படுகின்றது. அங்கு மழைநீர் தேங்கியிருந்ததால் அதன் வழியே வாக்கிங் சென்ற பழனியாண்டி மீது மின்சாரம் தாக்கி அவர் சம்பவயிடத்திலேயே இறந்துள்ளார்.

இதுகுறித்து தகவலின் பேரில் சம்பவயிடத்திற்கு விரைந்து சென்ற தூத்துக்குடி தென்பாகம் போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர். மேலும் பழனியாண்டி இறப்பு குறித்து விசாரணை நடத்திவருகின்றனர்.



பாஜக கோவை மாநகர் மாவட்ட அரசு தொடர்பு பிரிவு மாவட்ட செயலாளராக பொறுப்பேற்று கொண்ட அருண் (எ) யுவராஜாவை அனைத்து பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் முரளி மற்றும் கிருஷ்ணன் நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்தனர். இதனை தொடர்ந்து அவரிடம் தொழிலாளர் நலன் குறித்து பல்வேறு பிரச்சனைகளை எடுத்துக் கூறினார்கள்.

### அவிநாசி அருகே

## வேன் கவிழ்ந்த விபத்தில் மேச்சேரி வாலிபர் பலி!

### 14 பேர் காயம்!!

அவிநாசி, நவ.25–

சபரிமலை செல்லும் போது டயர் வெடித்து சாலையோரம் இருந்த தடுப்பின் மீது வேன் மோதிய விபத்தில் 14 பேர் காயமடைந்தனர். ஒருவர் பலியானார்.

சேலம் மாவட்டம் மேச்சேரியை அடுத்து ஆட்டுக்கார னூர் பகுதியில் இருந்து இரு சிறுவர்கள் உட்பட 22 பேர் சபரிமலைக்கு நேற்று மாலை சொகுசு வேனில் புறப்பட்டு சென்றனர்.



வேன் ஓட்டுனர்கள் இருவர் உட்பட மொத்தம் 24 பேர் வேனில் சென்றுள்ளனர். கொச்சின் கோவை ஆறு வழிச்சாலையில் செல்லும்போது திருப்பூர் மாவட்டம் அவிநாசியை அடுத்துபழங்கரைஅருகே வரும் பொழுது வேனின் இடது பின்புற டயர் திடீரென வெடித்தது.

இதில் நிலை தடுமாறிய வேன் சாலையோரம் கவிழ்ந்து விபத்துக்கு ள்ளானது.

இந்த விபத்தில் பதினான்கு பேர் காயமடைந்தனர். அதில் ஒருவர் பலி, மேச்சேரி பகுதியை சேர்ந்த ,சித்தையா 54 உயிரிழந்தார். காயம் அடைந்தவர்களை ஆம்புலன்ஸ் மூலம் திருப்பூர் அரசு மருத்துவமனை திருமுருகன்பூண்டி, பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்து குறித்து அவிநாசி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒகேனக்கல் காவிரி ஆற்றில் மூழ்கிய கூலித் தொழிலாளி!

### தேடும் பணி தீவிரம்!!

பென்னாகரம், நவ.25–

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் அடித்து செல்லப்பட்ட பீகாரை சேர்ந்த கூலி தொழிலாளி தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பீகார் மாநிலம் பாட்னாவை சேர்ந்தவர் முன்னா (30). பெரியாம்பட்டியில் உள்ள ஹாலோ பிரிக்ஸ் கம்பெனியில் கூலி தொழிலாளியாக வேலை செய்து வந்தார். தனது நண்பர்கள் 8 பேருடன் நேற்று ஒகேனக்கல் வந்துள்ளனர். ஒகேனக்கலில் பல்வேறு இடங்களை ஒகேனக்கலில் பல்வேறு இடங்களை சுற்றி பார்த்தனர். பின்னர் ஊட்டமலை பரிசல் துறை காவிரி ஆற்றில் நண்பர்களுடன் குளித்தனர். அப்போது முன்னா ஆழமான பகுதிக்கு சென்று குளித்த போது ஆற்றில் அடித்து செல்லப்பட்டார். நண்பர்கள் காப்பாற்ற முயன்றும் முடியவில்லை . இது தொடர்பாக நண்பர்கள் ஒகேனக்கல் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பெயரில் சம்பவ இடத்திற்கு வந்த ஒகேனக்கல் போலீஸ் இன்ஸ்பெக்டர் முரளி மற்றும் போலீசார் தீயணைப்புத் துறையினர் ஆற்றில் அடித்து செல்லப்பட்ட பீகாரை சேர்ந்த கூலி தொழிலாளியை தீவிரமாக தேடி வருகின்றனர் .

### ஃபுல்லி லைஃப்ப்ரூஃப் சலுகை:

## சேதக் தமிழ்நாட்டில் ரூ 12,000 வரை குறுகிய கால நன்மைகள் அறிவிப்பு!



சென்னை,நவ.25

உலகின் முன்னணி இருசக்கர வாகன உற்பத்தியாளரான பஜாஜ் ஆட்டோ லிமிடெட், தமிழக வாடிக்கையாளர்களுக்காக 'ஃபுல்லி லைஃப்ப்ரூஃப்' குறுகிய காலச் சலுகையை அறிவித்துள்ளது. இந்த முயற்சி சேதக் மின்சார ஸ்கூட்டரின் வலிமை, நம்பகத்தன்மை மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை முன்வைத்து, மாநிலம் முழுவதும் அன்றாட பயணிகளிடம் மேலும் ஈர்ப்பை உருவாக்குகிறது. இந்தச் சலுகை காலத்தில் சேதக் வரிசையின் எந்த மாடலையும் வாங்கும் வாடிக்கையாளர்கள் ரூ 12,000 வரை நன்மைகள் பெறலாம். இதில் 5 ஆண்டுகள் வரை இலவச விரிவாக்கப்பட்ட உத்தரவாதம், 24×7 இலவச சாலையோர உதவி மற்றும் ரைடு மோட், வழிகாட்டிகள், திருட்டு/விபத்து எச்சரிக்கைகள் உள்ளிட்ட அம்சங்களைக் கொண்ட டெக்பேக் ஆகியவை அடங்கும். சலுகை மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பஜாஜ் மற்றும் சேதக் டீலர்ஷிப்களில் கிடைக்கிறது. 153 கிமீ பயண தூரம், 35 லிட்டர் பூட் ஸ்பேஸ் மற்றும் வேகமான சார்ஜ் திறன் தொழில்துறை முன்னணி அம்சங்களுடன் வரும் சேதக், இந்தியப் பயன்பாட்டிற்கேற்ப வடிவமைக்கப்பட்ட லைஃப்ப்ரூஃப் தரத்தை முன்வைக்கிறது. கடினமான எஃகு உலோகக் கட்டமைப்பு, IP67 நீர்ப்புகாத பாதுகாப்பு, மேலும் நாட்டை முழுவதும் 3800+ சேவை மையங்களின் ஆதரவு ஆகியவை சேதக்கை இன்னும் நம்பகமானதாக மாற்றுகின்



சென்னை மாவட்டம், இராயபுரம் சட்டமன்றத் தொகுதி, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் தேசிய பள்ளியில் )நடைபெற்றவாக்காளர்உதவிமையத்தில்வாக்காளர்கள்ஆர்வமுடன்பங்கேற்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கான கணக்கீட்டுப் படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் வழிகாட்டுதலுடன் பூர்த்தி செய்தனர்.

## காதல் தோல்வியால் மது போதையில் உயர் மின் கோபுரத்தில் ஏறி வாலிபர் தற்கொலை முயற்சி!



தர்மபுரி,நவ.25

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் பகுதியைச்சேர்ந்தவர்நாகராஜ்என்பவரின் மகன் விஜி (25). இவரது தந்தை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ஜெராக்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறார்.

விஜி படித்து முடித்துவிட்டு தற்போது ஒசூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.இவர் காரிமங்கலம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை காதலித்து வந்ததாக கூறப்படுகின்றது.

அந்த பெண்ணுடன் தொடக்கத்தில் விஜி பேசி பழகி வந்தார். நாளடைவில் இந்தப் பெண் வேறு ஒருவரிடம் பேசி வருவதாக கூறி இருவருக்கும் இடையே சண்டை வந்ததாக கூறப்படுகின்றது. இதனால் அந்த பெண் விஜியுடன் பழகுவதை நிறுத்தி கொண்டார். விஜி வலிய வந்து பேசினாலும் அந்த பெண் பேச மறுத்து விட்டதாக கூறப்படுகிறது.

இதனால் இவர்களுடைய அடிக்கடி சண்டை வந்து தற்போது வேறு ஒரு ஆணுடன் அந்த பெண்ணுக்கு திருமணம் நாளை நடைபெற இருந்த நிலையில் தற்போது காரிமங்கலம் அடுத்த பொம்மனஅள்ளி கிராமத்தில் உள்ள உயர் மின் கோபுரத்தில் சுமார் 50 அடிக்கு மேல் ஏறி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

தகவல் அறிந்த காரிமங்கலம் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயணைப்புத் துறையினருக்கு தகவல் அளித்துவிட்டு, தற்போது அந்த இளைஞரைகாப்பாற்றும் பணியில் ஈடுபட்டு வந்த நிலையில் இரண்டு மணி நேர போராட்டத்திற்குப் பிறகு போலீசார் மற்றும் தீயணைப்பு துறை இணைந்து மீட்டனர்.



பாரதியஜனதாகட்சிபட்டியல்அணிமாநிலதலைவர்சம்பத்குமார்கோவையில்பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த போது கோவை மாநகர் மாவட்ட அரசு தொடர்பு மாவட்ட செயலாளர் அருண் ஜி (எ) யுவராஜா மரியாதை நிமித்தமாக சந்தித்து பொன்னாடை அணிவித்து மலர் கொத்து வழங்கி வரவேற்றார். அதை தொடர்ந்து பட்டியல் இன அரசு ஊழியர்கள் பிரச்சனைகள் குறித்து ஆலோசனை செய்தார்.

### ஒட்டன்சத்திரம் சந்தையில்

## முருங்கைகாய் கிலோ ரூ.190-க்கு விற்பனை!

ஒட்டன்சத்திரம்,நவ.25–

ஒட்டன்சத்திரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கப்பல் பட்டி,கள்ளிமந்தயம் மார்க் கம்பட்டி, இடைய கோட்டை, அம்பிளிக்கை , ஓ டை ப் ப ட் டி , சின்னக்காம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் முருங்கை விவசாயம் செய்யப்படுகிறது.



இந்த நிலையில் இப்பகுதியில் முருங்கை சீசன் முடிவடையும் தருவாயில் உள்ளதால் சந்தைக்கு முருங்கை வரத்து குறைந்தது.

தமிழ்நாட்டில் முருங்கை சீசன் முடிவடையும் பட்சத்தில் குஜராத்,மத்திய பிரதேசம் மாநிலங்களில் இருந்து முருங்கை வரத்து இருக்கும். ஆனால் அங்கும் மழை அதிக அளவு பெய்ததால் முருங்கை விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் முருங்கை வரத்து வருவதற்கு தாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாகவும் விலை உயர்ந்து வருகிறது இதனால் கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கை 85 ரூபாய்க்கு விற்பனையாகிவந்தநிலையில்கிடுகிடுவென விலை உயர்ந்து 190 ரூபாய்க்கு விற்பனை யானது.